# கற்பகம்
திங்கள் இதழ்
KATPAKAM
விலை ரூபா 10/-


### குறளமுதம்-8

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

அதிகாரம்-1 அறத்துப்பால் -கடவுள் வாழ்த்து

"அற ஆழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
பிற ஆழி நீந்தல் அரிது"

*அறக்கடலாகவும் அருளாளனாகவும் விளங்கும் இறைவனின் அடிகளை இடைவிடாமல் நினைப்பவர்க்கு அல்லாமல் மற்றவர்க்குப் பிறவிக் கடலைக் கடத்தல் இயலாது..*


மலர்-01 ஜூன்-2008 இதழ்-08


# ஓய்வூதியத் திட்டம் வெற்றிபெற உதவி ஆணையாளர் ஆலோசனை!



**"1980ம் ஆண்டு வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசத்தால் உருவாக்கப்பட்ட அங்கத்தவர் விபத்து ஓய்வூதிய நலத்திட்டம் படிப்படியாக மாற்றங்கள் செய்யப்பட்டு, தற்போது (01-01-2008ல் இருந்து ) 55-60 வயதை பூர்த்தி செய்த அங்கத்ததவர்களுக்கு அவர்களின் விபத்து ஓய்வூதிய நிதிப்பங்களிப்புக்கு ஏற்ற வகையில் மாதாந்தம் ஓய்வூதியம் வழங்கும் திட்டமாக இத்திட்டம் மாற்றமடைந்துள்ளது. யாழ். மாவட்டத்தில் அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் ஒரு சிறந்த திட்டமாகவும் ஏனைய கூட்டுறவு அமைப்புகளுக்கு ஒரு முன்மாதிரியாகவும் இத்திட்டம் இருப்பதனால் இதனை பாராட்ட வேண்டும்" என்று யாழ் மாவட்ட கூ.அ.உ.ஆணையாளர் பொ.சிவலிங்கம், சமாசப் பொதுமுகாமையாளருடனான சந்திப்பின்போது தெரிவித்தார்.**

இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஓய்வூதியம் பெறத் தகுதியுடை யவர்கள் சமாசத்தால் கோரப்படும் ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாத நிலைமையினை சமாச பொதுமுகாமையாளர் உதவி ஆணை யாளரிடம் எடுத்துக் கூறியதன் பயனாகவும், மா.கூ.அலுவலர், சமாச கூட்டுறவு அலுவலர் ஆகியோரும் இதன் பாதிப்பினை எடுத்துக்கூறியதன் பயனாகவும் கூ.அ.உ.ஆணையாளர் அவர்கள் பிறப்புச் சான்றிதழ் பெற முடியாத, ஓய்வுபெற்ற அங்கத்தவர்களின் பிறந்த ஆண்டினை அப்பகுதி சமாதான நீதவான் உறுதிப்படுத்து மிடத்து அதனை பரிசீலித்து ஓய்வூதியம் வழங்கவும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை ஆகியவை இல்லாத அங்கத்தவர்களுக்கு ஒரு விசாரணைக் குழு நியமித்து, அவர்கள் கோரும் ஆவணங்களை சமர்ப்பித்து உரிய அங்கத்தவர் ஓய்வூதியம் பெறமுடியும்.

இவ் ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் சங்க அங்கத்தவர்களும் அவர்களை சார்ந்துள்ள குடும்ப அங்கத்தவர் களும் நன்மை பெறக்கூடியதாக இத்திட்டத்தை தயாரித்து அமுல்படுத்த முன்வந்த சமாசத்தின் செயல் பாராட்டுக்குரியது. இத்திட்டத்தின் மூலம் அங்கத்தவர்கள் தங்களது இறுதிக்கால வாழ்க்கையினை வளம்படுத்திக் கொள்வதன் மூலம் எவருக்கும் பாரமில்லாது உயிர்வாழ முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## பின்தங்கிய நிலையில் உள்ள சங்கங்களை
# அபிவிருத்தி செய்ய வினைத்திறனுள்ள பணியாளர்கள் முன்வர வேண்டும்!

**"பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பின்தங்கிய நிலையில் உள்ள சங்கங்களை பொறுப்பேற்று நடத்துவதற்கு வினைத்திறன் உள்ள பணியாளர்கள் முன்வர வேண்டும்" என்று யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இ.பாலச்சந்திரன் அழைப்பு விடுத்தார்.**



பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடைபெற்ற சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்கள், மேற்பார் வையாளர்கள் ஆகியோருக்கான பயிற்சிக் கருத்தரங்கிலேயே அவர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

எந்த ஒரு நிறுவனத்தினதும் வளர்ச்சி அந்தந்த நிறுவனத்தின் வினைத்திறன் மிக்க பணித்தொகுதியின் செயற்பாட்டி லேயே தங்கியுள்ளது. பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களைப் பொறுத்தவரை சிறந்த வளங் களை முழுமையாகக் கொண்ட நிறுவனங்களாகும்.

சமூக, பொருளாதார அபிவிருத்தியை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இச்சங்கங்கள் தமது அங்கத்தவர் களுக்கும், அவர்களது பிள்ளைகளுக்கும் அதி உச்ச சேவையை வழங்கக் கூடிய நிறுவனங்களாக விளங்க வேண்டும்.

இந்த இலக்கினை அடைவதற்காக உருவாக்கப்பட்ட இந்நிறுவனங்களை திறம்பட நடத்துவதற்கு வினைத்திறன் உள்ள பணித்தொகுதி அவசியம் தேவை யாகும்.இத்தகைய வினைத்திறன் உள்ள பணித்தொகுதியினை உருவாக்குவதற்கு சங்கங்களில் உள்ள வினைத்திறன் மிக்க பணியாளர்கள் முன்வரவேண்டும். இதற்கு பணியாளர்கள் முன்வராவிட்டால் தற்போது பின்தள்ளப்பட்டுள்ள நிலையில் உள்ள சங்கங்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகவே இருக்கும்.

பொருத்தமான பணியாளர்களை அமர்த்துவதற்கு நிர்வாகங்கள் முன்வர வேண்டும். நிறுவனத்தின் அதி உச்ச வளர்ச்சிக்கு பணியாளர்களே முழுப் பொறுப்பானவர்களாக இருப்பதால் அவர்கள் நேர்மையுடன் தமது பணிகளை ஆற்ற வேண்டும். நேர்மையுள்ள, அர்ப்பணிப்புள்ள பணியாளர்களினது செயற்பாடுகளிலேயே சங்கங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் அமைந்துள்ளது எனவும் கூறினார்.

"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"

**சிந்தனைத்துளி**

*"முதலாளித்துவ நிறுவனங்களுள் கூட்டுறவு நிறுவனம் ஒன்று மட்டுமே மிகச் சிறந்த நிறுவன அமைப்பாகும். எப்பாடுபட்டாவது நாம் கூட்டுறவு நிறுவன அமைப்பை பாதுகாக்க வேண்டும். இதனை சீரழிக்க அனுமதிக்க கூடாது."* –பொதுவுடமைத் தந்தை லெனின்–

## கற்பகக்கரு

# பனைசார் உற்பத்திகளும் கோப்சிற்றிகளும்

யாழ். மாவட்டத்தில் உள்ள ப.நோ.கூ. சங்கங்கள் யாவும் தற்போது தமது அங்கத்தவர்களுக்கான சேவையினை புதிய புதிய அணுகுமுறைகளுடன் செய்து வருகின்றன. இச்சங்கங்கள் பெரும்பாலும் மக்களுடைய நுகர்ச்சித் தேவைகளையே பூர்த்தி செய்யக் கூடிய வகையிலேயே செயற்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் முக்கியமாக நுகர்ச்சிச் சேவையில் ஈடுபட்டிருப்பதனால் மக்களுக்கு அன்றாடம் தேவையான உணவுப் பொருட்களை பங்கீடு செய்து வழங்கி வருகின்றன.

அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகத்தின் ஏகபோக உரிமையைக் கொண்டுள்ள இச்சங்கங்கள் மகிந்த சிந்தனையின் கீழான 'கூட்டுறவு நகர்' என்னும் நாமத்தைத் தாங்கிய நவீன விற்பனை நிலையங்களை ஆங்காங்கே நிறுவி வருகின்றன. ஒரு கூரையின்கீழ் இருந்து செயற்பட்டுவரும் கூட்டுறவு இயக்கமானது பல்வேறு வகையான செயற்பாடுகள் மூலம் அங்கத்தவர்களுக்கும் அங்கத்தவர் அல்லாதவர்களுக்கும் சேவையாற்றி வருகின்றது.

இந்நிறுவனங்களில் மக்களுடைய அத்தியாவசிய தேவைகளுக்குரிய உணவுப் பொருட்கள் மட்டுமல்லாது உப உணவுப்பொருட்களும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. உபஉணவுப் பொருட்கள் என்று குறிப்பிடுகின்றபொழுது பனை, தென்னை வளங்களிலிருந்து பெறக்கூடிய உணவுப்பொருட்களை இங்கு நாம் குறிப்பிட்டு கூறலாம்.

மக்களுடைய அன்றாட நுகர்ச்சித் தேவைக்குரிய பொருட்களில் பெரும்பாலும் தென்னிலங்கையிலிருந்து எடுத்துவரப்படும் பொருட்களே முக்கிய இடம் பெற்றுள்ளன. யுத்த காலத்தில் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவிய வேளையில் ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் உற்பத்திப் பொருட்களான பனஞ்சீனி, பனைவெல்லம் என்பவற்றுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ப.தெ.வ.அ.கூ.சங்கங்களும் அக்காலகட்டத்தில் பனஞ்சீனி உற்பத்திக்கும் பனைவெல்ல உற்பத்திக்கும் முக்கியத்துவம் கொடுத்து வந்தன. இப்பொருட்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி தென்னிலங்கை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்குடன் ஏற்றுமதியும் செய்யப்பட்டன.

பனையிலிருந்து பெறப்படும் ஒவ்வொரு பொருட்களிலும் பல்வேறு வகையான உற்பத்திகளை மேற்கொள்ள முடியும். தென்னிலங்கை மக்கள் விரும்பும் பல்வேறு வகையான பனம் பொருட்களை பனை அபிவிருத்திச் சபை ஏற்றுமதி செய்து வந்துள்ளது. இந்நிலையில் பனை தென்னை வளங்களிலிருந்து பெறப்படும் ஒவ்வொரு உற்பத்திப் பொருட்களையும் முக்கியமாக, அலங்காரப் பொருட்கள் மற்றும் புழுக்கொடியல், ஒடியல் மா, பனாட்டு என்பவற்றை கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது செல்வாக்கு பெற்று வரும் நவீன விற்பனை நிலையங்களில் (கோப்சிற்றி) காட்சிப்படுத்தி விற்பனை செய்ய முன்வரவேண்டும் என கூட்டுறவு அபிவிருத்தி உ.ஆணையாளர், மா.கூ.ச.தலைவர் ஆகியோர் நவீன விற்பனை நிலையத் திறப்பு விழாக்களின்போது கூறி வருவது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

எனவே ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கங்களும் தங்களது நவீன விற்பனை நிலையங்களிலும் பனைசார் உற்பத்திப் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என கற்பகம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றது.

*"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"*

–ஆசிரியர்–

# கூட்டுறவுக்கும் சமூகப் பணிக்கும் இடையிலான தொடர்பை விருத்தி செய்தல்

ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் ஒன்று சேர்ந்து தமது பொருளாதார, கல்வி, கலாச்சார தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும், முதலாளித்துவ சுரண்டல்களில் இருந்து விடுபடவும் தமக்கு இடையே குறிப்பிட்ட கொள்கைகளை உருவாக்கி செயற்படும் அமைப்பே கூட்டுறவு ஆகும்.

மனித சமூகம் தோன்றிய காலம் தொடக்கம் தனித்து வாழ முடியாது என்பதை உணர்ந்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் முகமாக குழுக்களாக இணைந்து செயற்பட்டு தமது தேவைகளை பெற்று வாழும் முறைமையை ஏற்படுத்திக் கொண்டனர். ஆகவே மனித இனம் எப்போது தோன்றியதோ அப்போதிருந்தே கூட்டுறவும் உருவாகியது எனலாம்.

பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒருவரை ஒருவர் நாடிச் சென்று தமக்கிடையே ஒரு கூட்டுப் பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டதுடன் தமது பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் பகிர்வதற்கு வாய்ப்பாக அமைந்தது. மனித இனம் வளர்ச்சி அடைந்து விவசாயத்தில் ஈடுபட்ட காலத்தில் விவசாய நிலங்களில் வேலை செய்வதற்கு, அதாவது நிலத்தினைப் பண்படுத்தல், பயிரிடுதல், நீர்பாய்ச்சுதல், களை பிடுங்குதல், அறுவடை செய்தல் போன்ற வேலைகளில் சுழற்சி முறையில் ஈடுபட்டு தங்களுக்கு இடையே கூட்டிணைப்பை ஏற்படுத்தி இருந்ததுடன், உணவுகளைப் பரிமாறி உண்பதிலும் தமக்கிடையே பிரிக்க முடியாத அன்னியோன்யத்தை வளர்த்துக் கொண்டனர் எனலாம்.

காலம் செல்லச் செல்ல மனித இனம் பெருக்கமடைந்து மனித தேவைகளும் அதிகரித்துக்கொண்டு வந்தது. இதனால் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு நிறுவன கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டிய தேவைகளும் சூழ்நிலைகளும் ஏற்பட்டது. அத்துடன் மனிதனது தேவைகள் அதிகரித்துச் செல்லச் செல்ல அவர்களிடத்தே பிரச்சினைகளும் தோன்ற ஆரம்பித்தன. இவற்றைத் தீர்ப்பதற்கு சமூக மட்டத்திலான குழுக்களும் தோற்றுவிக்கப்பட்டன. இக்குழுக்கள் மூலம் அவர்களுக்கடையே ஏற்படுகின்ற பிணக்குகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளும் தோன்றியது. இவ்வாறே ஏனைய தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு சபைகளும் சங்கங்களும் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வந்தது. இவ்வாறு உருவாக்கப்பட்ட சங்கங்களும் சபைகளும் நிர்ணயிக்கப்பட்ட கொள்கைகளைக் கொண்டிருக்காத காரணத்தால் அவைகளால் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாது போய்விட்டது. இதன் காரணமாக இவ் அமைப்புக்கள் மூலம் சமூகப் பணிகளை முழுமையாக நிறைவேற்றிக் கொள்ள முடியாத ஓர் ஏதுநிலை தோன்றியதைக் காணக் கூடியதாக இருந்தது.

ஆகவேதான் பொருளாதார தேவைகளையும் முதலாளித்துவச் சுரண்டல்களிலிருந்து பாதுகாப்பது மட்டுமன்றி மனித இனம் நாகரீக வளர்ச்சி அடைந்துவர கல்வி, கலாச்சாரம், விழிப்புணர்வு போன்ற சமூகப் பணிகளையும் முன்னெடுக்க வேண்டிய தேவைப்பாடும் தோன்றியது. இவ்வாறான சமூகப் பணிகளையும் நிறைவேற்றும் பொருட்டு குறிப்பிட்ட ஒரு கொள்கையைக் கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்பே கூட்டுறவு ஆகும்.

கூட்டுறவுக்கும் சமூகப் பணிகளுக்கும் இடையேயான தொடர்பை ஆராயும்போது கூட்டுறவு நிறுவனங்கள் குறைந்த மூலதனத்துடன் அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்வதுடன், அவர்களுக்குத் தேவையான கல்வியினையும் வழங்கி வருகின்றது. ஆரம் கல்வியான பாலர் கல்வி முதல் முறைசார்நத கல்வியூடாக மதியொருக்கும் கல்வியினை ஊட்டுகின்ற கைங்கரியத்தினைச் செய்வதுடன் கலை, பண்பாட்டு வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு அவற்றை வளர்த்துவிடும் நோக்குடன் பேச்சு, கவிதை, நாடகம், கட்டுரை போன்றனவற்றோடு விளையாட்டுத் துறைகள் ஊடாகவும் பல்வேறுபட்ட போட்டிகளை நடாத்தி வருகின்றது. மேலும் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கிராமங்கள் தோறும் கிராமிய வங்கி அமைப்பு முறையினை உருவாக்கி அவற்றின் ஊடாக சேமிப்பு, சிக்கனம் போன்ற பண்பியல்புகளை அங்கத்தவர்களிடையே வளர்த்தும் கடன் வழங்கியும் மகத்தான பணிகளை ஆற்றி வருகின்றது.

இவ்வாறே கூட்டுறவில் மகளிரின் தொடர்பை மேம்படுத்தும் பொருட்டு அவர்களது தேவைகளை சுயமாகப் பூர்த்தி செய்யத்தக்கவாறான மகளிர் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களையும் மற்றும் தொழில்வாய்ப்புகளைத் தேடிக்கொள்ள ஏதுவாக தையல், பன்னவேலை, மனையியல், கணினி போன்ற துறைசார்ந்த பயிற்சி நெறிகளை வழங்கி மகளிரையும் சமூக அந்தஸ்த்தில் மேம்பட வைப்பதற்கு கூட்டுறவானது பெரும்பங்காற்றி வருகின்றது.

இவ்வாறாக அன்று மக்களால் மக்களுக்காக மக்களினால் உருவாக்கப்பட்ட கூட்டுறவானது சமூகப் பணிகளை அவ்வப்போது இனங்கண்டு அவற்றினைக் கூட்டுறவின் ஊடாக இலகுவாகவும் நிறைவாகவும் அனைத்து தரப்பினருக்கும் திருப்தி தரக் கூடியதாகவும் தொடர்புகளை விருத்தி செய்து கூட்டுறவுக்குள் இருந்து சமூகப் பணிகளையும் சமூகப் பணிகளுக்குள் இருந்து கூட்டுறவையும் பிரித்து வேறுபடுத்திப் பார்க்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு ஒரு ஆரோக்கியமான அழகான செயற்பாடாகத் திகழ்கிறது எனில் அது மிகை அல்ல.

**திரு.தி.பொ.ஜேசுராஜா,**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**கோண்டாவில்.**

## அங்கத்தவர் விபத்து ஓய்வூதிய நலத்திட்ட நடைமுறை விதி

முற்றொடர்-----

### 12.1. மத்தியகாலப் பாதிப்புக்கான கொடை

அ. பாதிப்புக்காலம் இரண்டு மாதங்களுக்கு மேலும் ஆறு மாதங்களுக்கு உட்பட்டதாகவும் அமைவது இப்பிரிவில் அடங்கும்.

ஆ. இத்தகைய பாதிப்புக்கான கொடுப்பனவுத் தொகை ரூபா 1000/- முதல் ரூபா 3000/- வரையாகும்.

இ. அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ் மூலம் பாதிப்பு உறுதி செய்யப்படல் வேண்டும்.

ஈ. இப்பிரிவில் அடங்கும் பாதிப்புக்களையிட்டு சங்க சிபார்சுக்கமைய பார்வையிடுவதிலும் நிதியை தீர்மானிப்பதிலும் சமாசம் பொறுப்புடையதாகும்.

### 12.2. நீண்டகாலப் பாதிப்புக்கான கொடை

அ. பாதிப்புக்காலம் ஆறு மாதங்களுக்கு மேலும் இரண்டு வருடங்களுக்கு உட்பட்டதாகவும் அமைவதாகும்.

ஆ. இத்தகைய பாதிப்புக்கான கொடுப்பனவு அங்கத்தவரின் பங்களிப்புத் தொகைக்கு ஏற்ப விபத்துக்குள்ளான அங்கத்தவர்களுக்கு மாதாந்தம் அங்கத்தவரின் பங்களிப்புத் தொகையின் 10% மாதாந்தக் கொடுப்பனவாக வழங்கப்படும் இக்கொடுப்பனவு ஒரு வருடத்திற்கு வழங்கப்படும்.

இ. அரச வைத்திய அதிகாரியின் மருத்துவ சான்றிதழ் மூலம் பாதிப்பின் தன்மை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

ஈ. இப்பிரிவில் அடங்கும் பாதிப்புக்களையிட்டு சங்க சிபார்சுக்கமைய பார்வையிடுவதிலும் நிதியை தீர்மானிப்பதிலும் சமாசம் பொறுப்புடையதாகும்.

### 12.3. நிரந்தரப் பாதிப்புக்கான கொடை

அ. இவ் விபத்து ஓய்வு நலத்திட்ட அங்கத்தவர் ஒருவர் தொழில்செய்யும் காலங்களில் எத்தகைய விபத்துக்களுக்கும் ஆளாவதன் மூலமாகவும், கை, கால் துண்டிப்பு அல்லது நிரந்தர இயலாமை, கண்கள் இழப்பு போன்ற பிரதான அங்கப் பாதிப்பு ஏற்பட்டு அவற்றின் இயக்கம் குன்றியும் எதிர்காலத்தில் நிரந்தரமாகவே சாற்று உற்பத்தி வேறு தொழிலில் ஈடுபட முடியாத நிலை நிரந்தரமான பாதிப்பாகக் கொள்ளப்படும்.

ஆ. உடலின் புறத்தே விளையத்தக்க அனைத்துப் பாதிப்புக்களும் அரச வைத்திய அதிகாரியின் மருத்துவ சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இ. சங்க சிபார்சுக்கமைய பார்வையிட்டு அறிக்கை செய்யப்படுவதன் அடிப்படையிலும், வைத்திய அதிகாரியின் அவதானிப்புக்களின் பிரகாரமும் சமாச நெறியாளர்குழு அதனை அங்கத்தவர் நிரந்தரப் பாதிப்பாக கருதப்பட்டு அங்கத்தவரின் பங்களிப்பின் 10% ஐ மாதாந்த ஓய்வூதியமாக தொடர்ந்து வழங்கும்.

### 12.4. விபத்து மரணக் கொடை

அ. இத்திட்டத்தின் அங்கத்தவர் ஒருவர் தொழிலில் ஈடுபடும்போது விபத்துக்குள்ளாகி மரணத்திற்கு உள்ளாகும் இடத்து இத்திட்டத்தின் கீழான விபத்து மரணக் கொடையைப் பெறுவதில் சட்ட ரீதியான பின்னுரித்தாளி உரித்துடையவர்.

ஆ. மரண அத்தாட்சிப் பத்திரம் பெறப்பட்டே இத்தகைய கொடுப்பனவுகள் பரிசீலிக்கப்படும். சேவைக்காலம், தொழில் திறன், சங்கத்துடனான ஈடுபாடு என்பன குறித்தும் சமாச நெறியாளர் குழு கருத்தூன்றி ஆராயப் பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

இ. பாதிக்கப்பட்டவரின் குடும்ப நலனுக்கு அதி சிறந்த வகையில் இக்கொடுப்பனவு பயன் விளைவிக்கத்தக்கதான ஏற்பாடுகளுக்கு குறித்த சங்கமும் சமாசமும் கருத்துடன் பங்காற்ற வேண்டும்.

ஈ. அங்கத்தவரின் பங்களிப்புத் தொகைக்கு ஏற்ப ரூபா 50,000 முதல் ரூபா 100,000 வரை கொடுப்பனவுத் தொகை அமையும்.

(வளரும்)




**மருத்துவக் குறிப்பு**

மனிதர் உடம்பில் பலவிதமான பூச்சிகள் வாழ்ந்து வருகின்றன. அவையாவன, நாக்குப் பூச்சி, கொக்குப்பூச்சி, இழைப்பூச்சி, நாடாப்பூச்சி போன்ற பல வகைகள் மனித உடம்பில் குடியேறி இருந்து வருவதுண்டு. இம்மாதிரிப் பூச்சிகள் மனித உடம்பில் உள்ளதனால் மனிதர் உண்ணும் உணவில் பெரும் பகுதியை இவை பகிர்ந்து உட்கொண்டு விடுவதால், மனிதர்களுக்கு அதிகமாக அடிக்கடி பசி உண்டாகின்றது. இதனால் வழக்கமான அளவு உணவைப் போல் இரு மடங்கோ, மும்மடங்கோ உண்ணவேண்டிய நிலைமை தானாக உருவாகி விடுகின்றது.

இம்மாதிரியான பூச்சிகள் நமது இரைப்பையிலும், சிறுகுடலிலும், பெருங்குடலிலும், மலக்குடலிலும் அதிகமாக வாசஞ் செய்வதை எப்படி வெளியேற்றுவது?

வாரம் ஒரு முறையோ, மாதம் இருமுறையோ சுத்தமான ஆமணக்கு எண்ணெய் (விளக்கெண்ணெய்) 5 மில்லியுடன் சுத்தமான வேப்பெண்ணெய் 5 மில்லியைக் கலந்து காலையில் வெறும் வயிற்றில், உள்ளங்கையில் ஊற்றி நக்கி சாப்பிட்டுவிட வேண்டும். இதை முடித்த ஒரு மணி நேரத்திற்குப் பின்பே காலை சிற்றுண்டியை உண்ணலாம். உணவு வகையில் சுவைக் கட்டுப்பாடு எதுவுமில்லை. அதிகமான அளவில் பூச்சிகள் வயிற்றில் இருந்தால், உணவு அதிகமாக உட்கொண்டும் உடல் மெலிந்தே இருப்பார்கள். இவர்கள் வாரம் 2 முறை கூட மேற்சொன்ன கலவை எண்ணெயை அருந்தலாம்.

இவ்வாறு சாப்பிட்ட எண்ணெய்க் கலவை உட்சென்றதும் கிருமிகளும், பூச்சிகளும் மலத்துடன் உயிருடனோ, இறந்தோ வெளிவந்த பின் உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

ஆகவே, முன்கூறிய முறையில் வயிற்றுப் பூச்சிகள் அகற்றப்பட்டு சுத்தமாக உடல் இருந்தால், உண்ணும் உணவு மிதமாக இருந்தாலும் பூரண வளர்ச்சியடைந்து, மேலும் நோய்கள் எதுவும் அணுகாமலும் வளமோடு வாழ்க்கையினை நடத்த முடியும்.



யாழ்.மாவட்ட கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியினால் நடத்தப்பட்ட கனிஷ்ட பிரிவு கூட்டுறவுப் பணியாளர்களுக்கான கற்கை நெறியினை பூர்த்தி செய்த மாணவர்களையும் கல்லூரி அதிபர், விரிவுரையாளர்கள், யாழ்.மா. கூ.ச.தலைவர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## சொல்லு மனமே

எம் தலையில் எழுதியதை
நாமே அறியுமுன்னே
யார் நிலையை யார் அறிவார்
சொல்லு மனமே

உணர்வுகள் புரியாத
உள்ளங்கள் இருக்கும்வரை
தளர்வதைத் தாங்குதல்தான்
கடமையடா

யார் வரவும் இனிப்பதில்லை
யார் செலவும் கசப்பதில்லை
எப்பவுமே இதுபோல்தான்
நடக்குமடா

நல்லவர்க்கு நியாயம் சொல்ல
யாருமே பிறந்ததில்லை
வல்லவர்கள் வாழ்க்கை இங்கு
தொடருமடா

தீராத துன்பம் இங்கு
என்றுமே தொடருமென்று
எம் தலையில் எழுதியதை
யார் தடுப்பார்

இ.காந்தன்
கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

## அவமானம்

ஏய் மனிதா
சந்திரனில் காலடி வைத்தாய்–சந்தோசம்
செவ்வாயில் தரையிறங்கித் தேடுகிறாய்–அற்புதம்
அண்டவெளியில் அரங்கம் அமைக்க
ஆயத்தப்படுத்துகின்றாய் –வாழ்த்துக்கள்
பறக்கும் தட்டுக்களை
மடக்க முயற்சிக்கின்றாய் –பிரமாதம்
எனினும் விலைவாசியை மட்டும்
எதற்காக விட்டு வைக்கிறாய்–அவமானம்

## மெத்தச்சரி

ஆதி மனிதன் ஆதாமும் ஏவாளும்
கடவுளின் படைப்பு எனில்
மனிதனிடமிருந்த "மனிதம்"
எப்படி மறைந்து போனது–இதற்கு
பரியோவானும் மத்தேயும்
பதில் சொல்லாது விடின்–மனிதன்
குரங்கிலிருந்துதான் கூர்ப்படைந்தான்
என்பதே மெத்தச் சரி....

## நீலிக்கண்ணீர்

ரைற் ஸ்கேட் கறா ஜீன்சுடன்
வந்து இறங்கியவர்கள்
நீலிக் கண்ணீர் வடித்தனர்–எமது
பாரம்பரிய பண்பாடுகளை
நாகரீகம் வந்து விழுங்கிப் போனதால்
எங்கள் இனம் தனது அடையாளங்களை
இழந்து போகிறதாம்....
உண்மைதான் எட்டுமுழச் சேலையும்
நாலு முழ வேட்டியும்
பட்டுச் சால்வையுடன்
பச்சை மஞ்சள் குங்குமமும்
பாவம் அவை இன்று
அரும் பொருட் காட்சியகங்களில்
மட்டுமே......!

–தே.யோ.தவராஜா–
ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
கோண்டாவில்.

## தேவை

மானிட வாழ்வில் மகத்துவம் பேசி
மாண்புற வாழ வழிபல சொல்லி
கூர்ப்பது கொண்டு குவலயம் தன்னில்
கூடியே வாழ்தல் கோடியே நன்மை

நாற்றிசை எங்கும் நம்மவர் வாழ்வர்
நாம் என்று சொல்லி நயமாய் செல்வர்
தேடிய செல்வம் கரைந்திடா வண்ணம்
தேவைகள் அறிந்து சேவைகள் செய்வர்

அகிலம் போற்றும் பண்புகள் கொண்டு
அதையே வாழ்வின் அணிகலன் ஆக்கி
சோரம் போகா வாழ்வது கண்டு
சோலைக் குயில் போல நம்மவர் வாழ்வர்

வெள்ளித் திரையில் நம்மவர் நாடகம்
வெளிச்சம் போடுது பண்பிலா வாழ்வதை
செய்த வேலையும் குறையினில் இருக்குது
செய்யப்போவதோ எதுவுமே புரியலை

ஊடகத் துறையது மானிட வாழ்விலே
ஊமையாய் ஆக்குதே உயர்ந்த கருத்தினை
சின்னத் திரையினில சித்தி தொடங்கியே
சில பல நாடகம் சிறப்பாய் போனதே

எதுவாய் இருப்பினும் இனியொரு காலம்
எம்மவர் வாழ்வில் நல் எண்ணங்கள் தோன்றிட
அனுபவ வாயிலாய் அவன் கவி போலவே
அவனியில் ஒரு கவி அவசியம் தேவையே

–அச்சுநகர் அச்சுதன்–

## கவியருவி

## தங்கத் தமிழ்த் தாயே!

குறளும் சிலம்பும் குணமாய் ஏந்தி
குதூகலமான உருவம் தாங்கி
குவலயம் போற்றும் செந்தமிழ் தாயே
குறைவின்றி வாழ அருள் புரிவாயே
மன்னார் கோவிலில் மகிழ்ந்திருந்தாயே
மறவரின் வீரத்தைக் கேட்டிருந்தாயே
கவிதையில் இருக்கும் கண்மணித் தாயே
கன்னித் தமிழ் அருள் புரிவாயே

செல்வி செ.சிவலோஜினி,
முன்பள்ளி ஆசிரியை, கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

## மன்னிப்பும் உண்டோ?

ஓலைப்பாயினிலே ஓராயிரம் ஓட்டை கொண்ட
ஓட்டை வீட்டினிலே படுத்துறங்கும் நினைவுகளும்
மாலை வந்தவுடன் நிலா வெளிச்சத்திலே
மழலைகள் ஒன்றுகூடி மண்விளையாடுவதும்
நிலா ஒளியினிலே உற்றாருடன் ஒன்றுகூடி
நிம்மதியுடன் கூழ்குடித்த நினைவுகளும்
மாந்தர் நாம் மறந்திட்டால் மன்னிப்பும் உண்டோ?

தி.சதீஸ்குமார்,
பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்

# நல்லதும் கெட்டதும்




முன்னொரு காலத்தில் இரு சகோதரர்கள் இருந்தார்கள். ஒருவன் பணக்காரன். மற்றொருவன் ஏழை. ஒரு நாள் இருவரும் சந்திக்க நேர்ந்தபோது ஏதோ பேசத் தொடங்கி விரைவில் பேச்சு வாக்குவாதமாய் வளர்ந்துவிட்டது.

"வாழ்க்கை எவ்வளவுதான் கொடுமையாய் இருப்பினும், எப்பொழுதும் நல்லது செய்வது தான் மேல்" என்றான் ஏழைச் சகோதரன்.

"நீ சொல்வது வாழ்க்கைக்கு ஒவ்வாத கருத்து" என்று பணக்கார சகோதரன் சொன்னான். "உலகில் தற்போது நல்லது எதுவும் இல்லை, எல்லாம் கெட்டதுதான். நல்லது செய்கிறவனுக்கு வாழ்வு இல்லை" என்றான்.

ஆனால் ஏழைச் சகோதரன் தன் கருத்தையே தொடர்ந்து வற்புறுத்தினான்.

"சகோதரனே நீ சொல்வது சரியல்ல, நல்லது செய்தால் எப்படியும் ஒருநாள் நன்மை விளையும் என்றே நினைக்கிறேன்" என்று ஏழைச் சகோதரன் கூறினான்.

"அப்படியானால், பந்தயம் கட்டுவோம் வா!" என்றான் பணக்காரச் சகோதரன். "வழியில் நாம் சந்திக்கும் முதல் மூவரும் என்ன நினைக்கிறார்கள் என்று கேட்டுப் பார்ப்போம். நீ சொல்வதே சரி என்பார்களானால், என்னிடம் உள்ளதெல்லாம் உனக்கு உரியதாகிவிடும். நான் சொல்வதே சரி என்பார்களானால், உன்னிடம் உள்ளதெல்லாம் நான் எடுத்துக் கொண்டுவிடுவேன்" என்று சொன்னான்.

"சரி, பார்ப்போம்!" என்று ஏழைச் சகோதரன் ஒத்துக் கொண்டான்.

அவர்கள் சாலையிலே நடந்து சென்றனர். ஓயாமல் நடந்துகொண்டே இருந்தார்கள். பருவக் காலம் முழுவதும் வேலை செய்துவிட்டு சொந்த ஊருக்குத் திரும்பி வந்துகொண்டிருந்த ஓர் ஆளை அவர்கள் சந்தித்தனர்.

"நண்பனே, வந்தனம்!" என்று அவனை அணுகினர்.

"வந்தனம் உமக்கு!"

"நாங்கள் ஒன்று கேட்க விரும்புகிறோம்."

"கேளுங்கள்!"

"வாழ்வதற்கு ஏற்ற வழி எது-நல்லது செய்வதா, கெட்டது செய்வதா?"

"நல்லவர்களே, இந்நாட்களில் நல்லது செய்கிறவனுக்கு வாழ்வு ஏது?" என்றான் அவன். "என்னைப் பாருங்களேன்! நெடு நாட்களாய் உழைத்தேன், பாடுபட்டு உழைத்தேன். ஆனால் எனக்குக் கிடைத்த ஊதியம் மிகச் சொற்பம், அதிலும் ஒரு பகுதியை என் எஜமானன் ஏதேதோ சொல்லிப் பிடுங்கிக் கொண்டான். நேர்மையாய் வாழ்கிறவன் பிழைக்க முடியாதவன். நல்லதை விடக் கெட்டது செய்வதே மேல்!" என்று அவன் வருத்தப்பட்டுக்கொண்டான்.

"பார்த்தாயா, நான் சொன்னதே சரி, நீ சொன்னது தப்பு!" என்றான் பணக்காரச் சகோதரன்.

ஏழைச் சகோதரனுக்கு உற்சாகம் குன்றிவிட்டது. ஆனால் என்ன செய்வது? பேசாமல் நடந்தான். பிறகு இருவரும் ஒரு வியாபாரியைச் சந்தித்தனர்.

"நாணயமான வியாபாரியே, வந்தனம்!" என்றனர் இருவரும்.

"வந்தனம் உமக்கு!" என்றான் வியாபாரி.

"நாங்கள் ஒன்று கேட்க விரும்புகின்றோம்."

"கேளுங்கள்!"

"வாழ்வதற்கு ஏற்ற வழி எது- நல்லது செய்வதா, கெட்டது செய்வதா?"

"அன்பர்களே, என்ன கேள்வி இது! நல்லது செய்தால் லாபம் ஏது? எதையும் விற்க வேண்டுமாயின் நூறு பொய் சொல்லி ஏமாற்றாமல் முடியுமா? முடியவே முடியாது!"

இப்படிச் சொல்லிவிட்டு அந்த வியாபாரி குதிரையிலே போய்ச் சேர்ந்தான்.

"பார்த்தாயா? இரண்டாம் தரமும் நானே வெற்றியாளன்!" என்றான் பணக்கார சகோதரன்.

ஏழைச் சகோதரன் முன்னிலும் அதிகமாய் சோர்வடைந்தான். ஆனால் என்ன செய்வது? பேசாமல் நடந்தான். இருவரும் நெடுந்தூரம் சென்றதும் ஒரு பிரபுவைச் சந்தித்தனர்.

"பிரபுவே, வந்தனம்!" என்றனர்.

"வந்தனம் உமக்கு!"

"நாங்கள் ஒன்று கேட்க விரும்புகின்றோம்."

"கேளுங்களேன்!"

"வாழ்வதற்கு ஏற்ற வழி எது-நல்லது செய்வதா, கெட்டது செய்வதா?"

"அன்பர்களே, என்ன கேள்வி இது! உலகில் இந்தக் காலத்தில் நல்லது எதுவும் இல்லையே! நல்லவனாய் இருந்தால் வாழ முடியாது. நான் நேர்மையான வழிகளில்தான் செல்வ தென்று ஆரம்பித்தால், பிறகு என் கதி....." என்று அந்தப் பிரபு தான் கூற வந்த வாக்கியத்தை முடிக்காமலேயே குதிரையை ஓட்டிச் சென்றுவிட்டார்.

"சரி சகோதரனே, வா வீட்டுக்கு! உன்னிடம் உள்ளதை எல்லாம் என்னிடம் ஒப்படை!" என்றான் பணக்கார சகோதரன்.

ஏழைச் சகோதரன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவனுக்கு துயரம் தாளமுடியவில்லை. அவனிடமிருந்த அற்ப சொற்ப உடைமைகள் யாவற்றையும் பணக்கார சகோதரன் எடுத்துக் கொண்டு விட்டான். வெறுங் குடிசையை மட்டும் அவனிடம் விட்டு வைத்தான்.

"தற்போதைக்கு நீ இங்கே இருந்து வா, இப்பொழுது எனக்கு இந்தக் குடிசை வேண்டியதில்லை. ஆனால் குடியிருக்க நீ விரைவில் வேறு இடம் தேடிக் கொண்டாக வேண்டும்."

ஏழைச் சகோதரன் தன் குடும்பத்தாருடன் குடிசையில் உட்கார்ந்திருந்தான். சாப்பிடுவதற்கு அவர்களிடம் ரொட்டியும் இல்லை, வேறு எதுவும் இல்லை. எங்கேயும் சென்று வேலை செய்து சம்பாதிப்பதற்கும் வழியில்லை. ஏனெனில் அவ்வருடம் பயிர்கள் விளைச்சலின்றி வீணாகிவிட்டன. ஏழைச் சகோதரன் தனது அவல நிலையைப் பொறுத்துக்கொள்ள முயற்சி செய்தான், சிறிது காலத்திற்கு பொறுத்துக் கொண்டும் இருந்துவிட்டான். ஆனால் குழந்தைகள் பசி தாங்காமல் அழத் தொடங்கினர். முடிவில் அவன் கொஞ்சம் மாவு கேட்டு வாங்கி வரலாமென்று ஒரு சாக்கை எடுத்துக்கொண்டு பணக்காரச் சகோதரனிடம் சென்றான்.

"ஒரு படி மாவோ, தானியமோ உன்னிடம் எது இருக்கிறதோ அதைக் கொடு" என்று கேட்டான். "சாப்பிட வீட்டில் ஒன்றும் இல்லை, குழந்தைகள் பசி தாங்காமல் அலறுகின்றன!" என்றான்.

"உனக்கு ஒரு படி மாவு தருகிறேன், ஆனால் உன் கண்களில் ஒன்றை அவிப்பதற்கு என்னை அனுமதிக்க வேண்டும்" என்று சொன்னான் பணக்கார சகோதரன்.

ஏழைச் சகோதரன் சற்று நேரம் ஆலோசனை செய்து பார்த்தான். ஆனால் ஒத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

"அப்படியே செய், கண்ணை அவி நீ, கடவுள் உன்னைக் காப்பாற்றட்டும்! ஆனால் கடவுளுக்காக வேண்டியேனும் எனக்குக் கொஞ்சம் மாவு கொடு!" என்றான்.

ஆகவே பணக்காரச் சகோதரன் ஏழைச் சகோதரனின் கண்களில் ஒன்றை அவித்துவிட்டு, கட்டி பிடித்த மாவில் ஒரு படி அவனுக்குக் கொடுத்தான். ஏழைச் சகோதரன் அதை எடுத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினான். அவனைப் பார்த்ததும் அவன் மனைவி அதிர்ச்சியுற்று "என்ன ஆயிற்று உனக்கு, உன் கண் எங்கே?" என்று கேட்டாள்.

"என் சகோதரன் அதை அவித்துவிட்டான்" என்று பதிலளித்தான்.

நடந்தது அனைத்தையும் அவளிடம் சொன்னான். எல்லோரும் அழுது புலம்பினர், சிறிது நேரம் வருந்தினர். ஆனால் சாப்பிடுவதற்கு மாவு கிடைத்தது.

ஒரு வாரம் கழிந்தது, அல்லது இன்னும் சற்று அதிக காலம் கழிந்திருக்கலாம் மாவு தீர்ந்துபோய்விட்டது. ஆகவே ஏழைச் சகோதரன் மீண்டும் சாக்கை எடுத்துக்கொண்டு பணக்காரச் சகோதரனிடம் சென்றான்.

"அருமைச் சகோதரனே, எனக்கு இன்னும் கொஞ்சம் மாவு கொடு, முன்பு நீ கொடுத்தது முழுவதும் தீர்ந்து போய்விட்டது" என்றான்.

"உன்னுடைய இன்னொரு கண்ணையும் அவிப்பதற்கு என்னை அனுமதித்தாயானால், ஒரு படி மாவு தருகிறேன்" என்று பணக்காரச் சகோதரன் பதிலளித்தான்.

"சகோதரனே, இரு கண்களும் இல்லாமல் எப்படி நான் வாழ்வேன்! ஏற்கனவே ஒன்றை அவித்து விட்டாய்! இரக்கம் கொண்டு இன்னொரு கண்ணையும் அவிக்காமல் மாவு கொடு"

"அதெல்லாம் முடியாது! இன்னொரு கண்ணையும் அவிக்க அனுமதித்தாலன்றி மாவு தரமாட்டேன்"

ஏழைச் சகோதரனுக்கு வேறு வழியில்லை.

"சரி, இன்னொரு கண்ணையும் அவி, கடவுள் உன்னைக் காப்பாற்றட்டும்" என்றான்.

உடனே பணக்காரச் சகோதரன் ஒரு கத்தியை எடுத்து தனது ஏழைச் சகோதரனின் இரண்டாவது கண்ணையும் அவித்து விட்டு அவன் சாக்கில் மாவை நிரப்பினான். கண்ணில்லாச் சகோதரன் அதை எடுத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

-வளரும்-



# கந்தசாமியில் விக்ரமின் பாடல்

சீயான் விக்ரம், மீண்டும் பாடகர் ஆகியுள்ளார் கந்தசாமி படத்தில். அட்டகாசமாக ஒரு பாடலைப் பாடியுள்ளார்.

சுசி. கணேசன் இளைத்து இளைத்து உருவாக்கி வரும் படம் கந்தசாமி. கலைப்புலி தாணு தயாரித்து வருகிறார். விக்ரம் பிரமிப்பூட்டும் வகையில் நடித்து வருகிறார். ஜோடி போட்டிருப்பவர் ஸ்ரேயா.

படத்தில் அவரும் ஸ்ரேயாவும் ஆடிப் பாடும் டூயட் பாடல் ஒன்று வருகிறது. இதில் சுசித்ரா. ஸ்ரேயாவுக்காக குரல் கொடுத்துள்ளார். விக்கிரமுக்காக அவரே குரல் கொடுத்துள்ளார்.

''எக்ஸ்கியூஸ் மி மிஸ்டர் கந்தசாமி'' என்று அந்தப் பாடல் தொடங்குகிறது. மனதை அள்ளும் லொகேஷன்களில் இந்தப் பாடலைப் படம் பிடித்துள்ளனர்.

தேவிஸ்ரீ பிரசாத்தின் இசையில் பாடல் ஏற்கனவே ஹிட் ஆகிவிட்டது. பாடல் வெளியீட்டின் போதே இந்தப் படல்களின் சில காட்சிகளைக் காட்டினர். மேலும் 'டிரெய்லரிலும்' இப்பாடல் இடம்பெற்றிருந்தது. இப்போது சின்னச் சின்ன நகாசு வேலைகள் செய்து பாடலுக்கு மேலும் மெருகேற்றியுள்ளனராம். இப்போது முன்பை விட புஷ்டியாக இருக்கிறதாம் பாடல்.

விக்கிரம் பின்னணிப் பாடல் பாடுவது புதிதில்லை. ஏற்கனவே, ஏ.வி.எம். ஜெமினி படத்தில் '' ஓ போடு'' பாடலைப் பாடியுள்ளார். இப்போது கந்தசாமிக்காக குரல் கொடுத்துள்ளார்.




# மீண்டும் சமிக்ஷா



தமிழ் சினிமாவை விட்டு காணாமல் போய்விட்ட சமிக்ஷா மறுபடியும் திரும்பி வந்துள்ளார். இரட்டை நாயகிகளில் ஒருவராக கார்த்திகை என்ற படத்தில் நடிக்கிறார்.

அறிந்தும் அறியாமலும் படம் மூலம் தமிழுக்கு வந்தவர் சமிக்ஷா. அதன் பின்னர் ஓரிரு படங்களில் நடித்தார். கவர்ச்சி காட்ட சற்றும் தயங்காதவராக இருந்தும் கூட அவரது மார்க்கெட் சூடு பிடிக்கவில்லை.

சமீப காலமாக கையில் ஒரு படமும் இல்லாமல் ஓரம் கட்டப்பட்டு விட்டார் சமிக்ஷா. இடையில் இந்தி தொலைக்காட்சித் தொடரில் நடிக்கப்போயிருந்தார்.

இந்த நிலையில் சமிக்ஷாவுக்கும் ஒரு படம் கிடைத்துள்ளது. அப்பா, மகள், அண்ணன், தங்கை பாசத்தை அடிப்படையாக வைத்து உருவாகும் படம்தான் கார்த்திகை. இதில் நாயகனாக விசில் பட நாயகன் விக்கிரமாதித்யா (இவரும் காணாமல்போய் திரும்பியவர் தான்) ஹீரோவாக நடிக்கிறார்.

அவருக்கு ஜோடியாக சமிக்ஷா நடிக்கிறார்.

# இயக்குநராகிறார் விஷால்!

டைட் யூனிபார்மில் தயாராகிக் கொண்டிருக்கிறார் விஷால். காக்கியை உடுத்திக் கொண்டால் கம்பீரம்! கழற்றிவிட்டால் குழந்தையாக திரிகிற பொலிஸ் ஆபிசரின கதைதான் சத்யம். க்ளைாக்சுக்காக ஒரு மொட்டையும் போட்டிருக்கிறார். கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக இரும்பாக இருந்த விஷால் 'அப்பாடி' என்று அசந்து உட்கார நேரம் இல்லாமல் அடுத்த குதிரையில் ஏற பயிற்சி எடுத்துக் கொண்டிருப்பதுதான் தமிழ் சினிமா கவனிக்க வேண்டிய செய்தி.

குருவியை தொடர்ந்து உதயநிதி தயாரிக்கும் அடுத்த படத்தில், விஷால் நடிக்கிறார் என்பதுதானே நேற்றுவரை நிலவிய செய்தி. அப்படியில்லையாம். சத்யத்திற்கு பிறகு தானே இயக்கி நடிக்கும் ஒரு படத்தை தனது அண்ணன் தயாரிப்பிலேயே துவங்க போகிறார் விஷால். இந்தப் படம் வெளியான பிறகுதான் உதயநிதியின் படத்தில் நடிக்கிறார். இதற்கிடையில் உதயநிதி வேறொரு நடிகரை வைத்து வேறு படத்தை தயாரிப்பாராம்.

நல்லா போயிட்டு இருக்கு. அதுக்குள்ளே டைரக்ஷன் அது இதுன்னு திசை திரும்பணுமா என்று நண்பர்கள் குண்டூசியாக குத்துகிறார்கள். இரும்பு மனசுக்குள் அதெல்லாம் ஏறுமா என்ன? பிடிவாதமாக அடுத்த படத்தை தானே இயக்கப் போவதாக முடிவெடுத்து விட்டார் விஷால். குழந்தைகள் மற்றும் பெரியவர்களை கவருவதற்காக ஒரு கதையை நேரம் கிடைக்கும் போதெல்லாம் உருவாக்கி வந்தாராம். அதில் சூப்பர்மேனாக நடிக்கப் போகிறார் விஷால். சத்யம் ரிலீஸ் ஆன கையோடு படப்பிடிப்பு துவங்கவிருக்கிறது. இது விஷாலின் கனவுப்படமாம். கொஞ்சம் காஸ்ட்லியான கனவுதான்.

# ஏகன் அஜித்திற்கு அம்மா சுஹாசினி



அக்ஷன் ஹீரோக்களுக்கு அம்மாவாக நடிப்பதில் தான் ஆபத்து அதிகம். கண்டிப்பாக ஒரு காட்சியில் வில்லனின் கோபத்திற்கு ஆளாகி, கைகள் கட்டப்பட்டு கண்ணீர் சிந்த வேண்டி வரும். அந்தக் காலத்து கண்ணாம்பாள் தொடங்கி லேட்டஸ்ட் சீதா, சரண்யா வரைக்கும் இந்தக் கோரக் காட்சிக்கு ஆளாகாத அம்மா நடிகைகளே இல்லை! ஆனால், சின்னத்திரை திரை விமர்சனத்தில் ஒவ்வொரு படத்தையும் அலசி ஆராய்ந்து கிழித்து தொங்கப் போடும் சுஹாசினியும் அம்மா வேடத்திற்கு வந்து விட்டது தான் ஆச்சர்யம்.

ராஜு சுந்தரம் இயக்கும் 'ஏகன்' படத்தில் அஜித்திற்கு அம்மாவாக நடிக்கிறாராம் சுஹாசினி. முதலில் இந்த கேரக்டருக்கு யார் யாரையோ யோசித்த ராஜுசுந்தரம். தாய்க்கும் மகனுக்குமான எமோஷனல் காட்சிகள் அதிகம் இருப்பதால் முகத்தில் நடிப்பைக் கொட்டி கொடுக்கக் கூடிய நடிகை வேண்டும் என்று யோசித்தாராம். மின்னலைப் போல வந்தது சுஹாசினியின் முகம் தான்! அஜித்திற்கு அம்மாவாக நடிக்க சுஹாசினியும் மகிழ்ச்சியோடு முன் வந்ததால் இப்போது ஏற்காட்டில் நடக்கும் படப்பிடிப்பில் நவரசத்தையும் கொட்டிக் கொண்டிருக்கிறார் சுஹாசினி.

அஜித் படத்தைப் பற்றிப் பேசி விட்டு 'தல' பற்றிய தகவல் ஒன்றைச் சொல்லாமல் போனால் எப்படி? கேன்ஸ் திரைப்பட விழாவில் பங்கேற்கச் சென்ற அஜித் விமான நிலையத்தில் நடந்து சென்று கொண்டிருக்கும் போது முன்னால் சென்ற ஒரு பெண் ஒருவர் தவற விட்ட கர்சிப்பை எடுத்து அவரிடம் கொடுத்தாராம். கொடுத்தது அஜித் என்று தெரிந்ததும் அந்தத் தமிழ் நாட்டுப் பெண் கொஞ்ச நேரம் பேச முடியாமல் வாயடைத்து திகைத்து நிற்க 'கூல்' என்று முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு வெறியேறினாராம் அல்டிமேட் ஸ்டார்! 'தல'யின் எளிமையை பெருமையாக சொல்லிக் கொண்டிருந்தார் அவரோடு பயணம் போன ஒரு அன்பர்!







இந்த இதழில் ஆபிரிக்கா கண்டத்தில் இருக்கும் சூடான் நாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ளுவோம்.

## சூடான்

தலைநகரம் : கார்டோம்

மக்கள் தொகை : 2கோடியே 67 லட்சம்

பரப்பளவு : 9 லட்சத்து 67 ஆயிரத்து 500 ச.கி.மீ

மதம் : இஸ்லாம், கிறிஸ்தவம், பழங்குடியினர்

மொழிகள் : அராபிக், ஆங்கிலம்

கல்வியறிவு : 27 சதவீதம்

நாணயம் : தினார்

ஒலிபோன் : 325 பேருக்கு ஒன்று

தொலைக்காட்சி : 22 பேருக்கு ஒன்று

மருத்துவர்கள் : 9700பேருக்கு ஒருவர்

தாதிகள் : 1440பேருக்கு ஒருவர்

பொருளாதாரம் : பருத்தி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி, ஓரளவு விவசாயம் கால்நடை வளர்ப்பு, தாதுக்கள் வெட்டியெடுத்தல், பெற்றோலிய உற்பத்தி.

சராசரி ஆயுட்காலம் : 50 வயது


நாட்டின் வளர்ச்சி வீதம் : 0.2 சதவீதம்

தனிநபர் வருமானம் : ஆண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய்

இராணுவ பலம் :-

தரைப்படை 68 ஆயிரம்பேர், கடற்படை 2500 பேர், விமானப்படை 5000 ஆயிரம் பேர்.

## நிறம் தீட்டுங்கள்கள்!





உலகிலேயே மிக நீளமான இறக்கை கொண்ட (25 அடி நீளம்) டெரடோன் என்ற கழுகு இங்கே மறைந்துள்ளது. அதற்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள இலக்கங்களுக்கு தகுந்தபடி வண்ணம் தீட்டுங்களேன்.

1. ஊதா 2. மஞ்சள் 3. நீலம்
4. வெள்ளை 5. சிவப்பு

## 'கற்பகம்' வாசகர்களுக்கான வார்த்தைச் சடுகுடு

### போட்டி-05




**இடமிருந்து வலம்:**

1. நீண்ட நாள் தாம்மைப்படுத்தாத இடங்களில் ஏற்டக் கூடியது. (4)
2. அணுவாயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்தி டாத ஒரு நாடு. (5)
3. பதநீர் சேகரிப்பதற்கு இதனை பயன்படுத்துவர் (மாறியுள்ளது) (6)
5. இது பிறந்தால் நியாயம் பிறக்கும் என்பர்.(4)
8. இதன் வெற்றிக்காக முற்காலத்தில் பறவைகள் தூதுசென்றன. (3)
9. இதனை ஒரு மருந்தாக உணவில் சேர்ப்பர். (திரும்பியுள்ளது) (3)

அன்பான கற்பகம் வாசகர்களே! உங்கள் சிந்தனைத் திறனை தூண்டும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்கு கொண்டு பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெறுங்கள்!

**போட்டி-04 விடைகள்**

| இடமிருந்து வலம்: | | மேலிருந்து கீழ்: | |
|---|---|---|---|
| 1. சோயாளம் | 4. சைபிரஸ் | 1.சோக்கிரட்டீஸ் | 8. இம்சை |
| 2. கிரகம் | 10. புடைவை | 5.பாலகர் | 9. உலகம் |
| 3. கராட் | 11. ஏழல் | 6.புரதம் | 12.நிழல் |
| | | 7.கப்பி | |

**கற்பகத்தின் வார்த்தைச் சடுகுடு போட்டியில் ஆர்வத்துடன் கலந்து கொண்ட அனைத்து வாசகர் களுக்கும் எமது பாராட்டுக்கள்!**

**மேலிருந்து கீழ்:**

1. பாலைவனங்களின் வாகனம் என அழைக்கப்படுவது. (5)
4. கறுப்பு நிறத்திற்கு ஒப்பிடுவர்-மாறியுள்ளது. (3)
6. கோபுரத்தின் உச்சியில் இருப்பது. (4)
7. சர்வதேச நீதியாளன். (5)
10. இது இல்லாத நாட்டில் மழை இல்லை. (மாறியுள்ளது) (2)

**அனுசரணை**

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசம் (வ–து)
சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



சமாசத்தால் 2008ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் 60 வயதைப் பூர்த்தி செய்த அங்கத்தவர்களுக்கான மாதாந்த ஒய்வூதியம் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு கூ.அலுவலர் விஜய மோகனராசா, யாழ்.பிரதேச செயலர் திரு.ஜெகூ மரிய தாசன் மற்றும் சமாச பொதுமுகாமையாளர் ஆகியோர் காசோலைகளை வழங்குவதனை படங்களில் காணலாம்

## கண்ணீர் அஞ்சலி



வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச. சமாச அலுவலக காவலாளியாக கடமையாற்றிய

**அமரர் வல்லிக்குட்டி சிவபாதம் (குருக்கள்)**

அவர்களின் திடீர் மரணத்தினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள்.**
**வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்**



ஒய்வூதியம் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், கல்வி உத்தியோகத்தர்களுடன் ஓய்வூதியம் பெறுபவர்களின் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.


## இதோ எமது சேவைகள்!



- உள்ளூர், வெளியூர் தொலைபேசிச் சேவை.
- கிராமிய வங்கிச் சேவை.
- பிளாஸ்டிக் மற்றும் இரும்புக் கதிரைகள் வாடகைச் சேவை.
- ஓய்வுபெற்ற உறுப்பினர்களுக்கான மாதாந்த ஓய்வூதியம் வழங்கும் திட்டம்.
- முன்பள்ளி நிலையங்களை நிறுவி நடாத்துதல். (இதுவரையில் 9 முன்பள்ளிகள்.)
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனம் வழங்குதல்.
- உறுப்பினர்கள், பணியாளர்களது பிள்ளைகளுக்கு சுழற்சி முறையில் வருடாந்தம் நிதிக்தொகை வழங்குதல்.
- உறுப்பினர்கள், பணியாளர்களது பிள்ளைகளுள் ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த(சா/த), க.பொ.த(உ/த) ஆகியவற்றில் சித்தியடைந்தவர்களுக்கும் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்களுக்குமான ஊக்குவிப்பு நிதி வழங்குதல்.
- உறுப்பினர்கள், பணியாளர்கள் மரணம் அல்லது நிரந்தரப் பாதிப்படைந்தால் அவர்களது கல்வி பயிலும் பிள்ளைகளில் ஒருவருக்கு கல்வியைத் தொடர்வதற்கான மாதாந்த உதவு தொகை நிதி வழங்கல்.
- முன்பள்ளி மாணவர்களுக்கான தகுதிகாண் பரீட்சை மற்றும் அவர்களுடைய விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்குதல்.
- உறுப்பினர்கள், பணியாளர்கள் மகளிர் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு காலத்துக்கு காலம் தொழில்சார் பயிற்சிகளை வழங்குதல்.
- வருடந்தோறும் சிறந்த உறுப்பினர்கள் , பணியாளரை தெரிவு செய்து கௌரவித்தல்.
- உறுப்பினர்கள், பணியாளர்களுக்கு இலவச கண்பரிசோதனையை மேற்கொண்டு மூக்குக் கண்ணாடிகளை வழங்குதல்.
- வருடந்தோறும் கூட்டுறவுதின நிகழ்வுகளின்போது பணியாளர்கள், உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் ஒன்றிணைத்து தொழில்சார் மற்றும் அறிவுசார் போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்குதல்.

இவற்றுடன் எமது பனைசார் உற்பத்தியான போத்தலில் அடைக்கப்பட்டு குளிரூட்டப்பட்ட கள்ளு விற்பனை

**கோண்டாவில் பனை தென்னை வ.அ.கூ.சங்கம்**

கே.கே.எஸ்.வீதி, தாவடிச் சந்தி,கோண்டாவில் தொலைபேசி: 021 222 3539


## இம்மாதக் கல்விப் பயிற்சி

சமாசத்தால் மாதந்தோறும் நடத்தப்பட்டு வரும் கல்விப் பயிற்சிகளின் வரிசையில் இம்மாதம் நடத்தப்படும் பயிற்சி தொடர்பான விபரங்கள் வருமாறு,

10-06-2008ல் மாவட்ட மட்ட பயிற்சியில் கல்வி உத்தியோகத்தர்கள், மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சியும், 13-06-2008ல் கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம், 20-06-2008ல் கொடிகாமம், சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள், 26-06-2008ல் அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்க அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கான பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2008ம் ஆண்டு ஜூன் மாதம் வெளியிடப்பட்டது.